**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.271/2022

நாள்: 10.09.2024

பெயர்: இராஜவள்ளி (வா.சா.1) க/பெ: வேல்முருகன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை...**

1) 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாத்தா கிருஷ்ணசாமி என் தாயர் வீரம்மாளிடம் ரூ.3500/–யை தாவா சொத்தைப் பொறுத்து அடமானம் தொகையை செலுத்திவிட்டார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அடமான தொகையை செலுத்திய பிறகு தாவா சொத்திற்கு கிருஷ்ணசாமிக்கு பாத்தியப்பட்டு அவருக்கு அரசு நில உடைமை திட்டத்தின் கீழ் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 23.04.1991ல் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாத்தா கிருஷ்ணசாமி 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் தாவா சொத்தைப் பொறுத்து உயில் சாசனம் எழுதியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட உயிலின் படி 1 முதல் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தை அனுபவித்து வந்து அவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தைப் பொறுத்து என் பெயரிலோ, என் தாயார் பெயரிலோ பட்டா எதுவும் இல்லை என்றால் சரிதான்.

2) தாவா சொத்தில் சர்வே எண், அதன் விஸ்திரனம் எனக்கு தெரியாது. தாவா சொத்தில் நான்கெல்லை விபரம் எனக்கு தெரியாது. தாவா செலவுத் தொகையுடன் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–திரு.S.கணேஷ்,M.Com., M.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(மு.கூ.பொ)
ஜெயங்கொண்டம்.